FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301671

12/AC/2026

1. District : Salem PS: Salem V2 AC Year: 2026 FIR No.: Date: 28.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு (மு.த.அ. எண்) நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 1) 23.07.2026 at about 17.00 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : 2) 27.07.2026 at about 10.30 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 17.15 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.07.2026 நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Volume III Time : 06.30 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.07.2026 நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 20km West

Beat Number : (b) Address : O/o. Assistant Engineer (O&M) K.R.Thoppur Section, TNPDCL, Salem.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Ananthi தந்தை / கணவர் பெயர் Vasu

(c) Date / Year of Birth : — (d) Nationality : — (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : House wife (g) Address : No. 2/22, Kitchipalayam, K.R.Thoppur, T. Konagapadi Village, Omalur Taluk, Salem District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. Kavitha, Assistant Engineer Operation & Maintenance, K.R.Thoppur Section, TNPDCL, Salem.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted

Details enclosed in Separate Sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/07/2026.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு Ananthan.V
28.07.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.07.2026
07.45 hrs.

Name: பெயர் M. Nallamma1.
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police.
V&AC, Salem.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 27.07.2026-ம் தேதி மாலை சுமார் 17.15 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.M.நல்லம்மாள் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திருமதி.R.ஆனந்தி, W/o.P.வாசு, 2/22, கிச்சிபாளையம், கே.ஆர்.தோப்பூர், டி.கோனகாபாடி கிராமம், ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் R.ஆனந்தி, W/o.P.வாசு, 2/22, கிச்சிபாளையம், கே.ஆர்.தோப்பூர், டி.கோனகாபாடி கிராமம், ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சேலம் மாவட்டம். ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது கணவர் வாசு தனியார் நிறுவனத்தில் டிரைவராக வேலை செய்து வருகிறார். கே.ஆர்.தோப்பூரில் எங்களுக்கு சொந்தமான இடத்தில் எனது பெயரில் தென்னை நாரில் இருந்து கயிறு திரிக்கும் மெசின் போட்டு தொழில் செய்யலாம் என்று, அதற்கான கட்டுமான பணிகளை செய்தோம். மாவட்ட தொழில் மையத்தில் இருந்து சிறு குறு தொழில் முனைவோர் சான்றிதழும் பெற்றோம். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து தொழில் மின் இணைப்பு பெற 09.06.2026-ம் தேதி விண்ணப்பம் செய்து, மின் இணைப்பு வழங்குவதற்காக செலுத்த வேண்டிய தொகை மொத்தம் ரூ.13,725/-ஐ ஆன்லைன் மூலம் செலுத்திவிட்டோம். எங்கள் இடத்தை கே.ஆர். தோப்பூர் A.E. திருமதி.கவிதா, மற்றும் அலுவலர்கள் வந்து பார்வையிட்டு சென்றார்கள். ஆனால் அதன் பின்னரும் எங்களுக்கு மின் இணைப்பு வழங்கவில்லை. நானும் எனது கணவரும் பலமுறை EB ஆபீஸ் சென்று வந்தோம். கடந்த 23.07.2026-ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு நானும் எனது கணவரும் கே.ஆர் தோப்பூர் E.B. அலுவலகம் சென்று அங்கிருந்த A.E. திருமதி.கவிதா அவர்களை சந்தித்தோம். அப்போது அவர் ஏற்கனவே கட்டிய கட்டணம் இல்லாமல் தனியாக ரூ.5,000/- தந்தால்தான் மீட்டர் பொருத்தி கனெக்சன் கொடுக்கமுடியும் என்று சொன்னார். நாங்கள் தற்சமயம் எங்களிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னோம். அதற்கு A.E. திருமதி.கவிதா அடுத்தநாள் வெள்ளிகிழமை காலை

பணத்தை கொண்டுவந்து கொடுங்க உடனே மீட்டர் வைச்சிடலாம் என்று சொன்னார். நாங்கள் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். பின்னர் 3 நாட்கள் கழித்து இன்று 27.07.2026-ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு நானும் எனது கணவரும் கே.ஆர் தோப்பூர் E.B. அலுவலகம் சென்று அங்கிருந்த A.E. திருமதி.கவிதா அவர்களை சந்தித்து அவர்கள் கேட்ட பணத்தை தயார் செய்யமுடியவில்லை என்று தெரிவித்தோம். அப்போது அவர் சரி ஏற்பாடுபண்ணி கொடுங்க எல்று சொல்லிவிட்டு, நீங்க உங்க மெசின் யூனிட்டுக்கு இன்னும் இரண்டு KW கூடுதலாக கேட்டால், நான் அதன்மூலம் அந்த பகுதிக்கு லோடுகுறைவாக இருப்பதாக ஒரு டிரேன்ஸ்பார்மர் போட புரபோசல் அனுப்புவேன், அவ்வாறு டிரேன்ஸ்பார்மர் போட்டால் உங்களுக்கும் நல்லது, அதற்கு நீங்கள் தனியா டெபாசிட் கட்ட வேண்டியதில்லை என்றும் கூறினார். மேலும் ஏற்கனவே நான் கேட்டிருந்த பணம் ரூ.5000/-க்கு பதிலாக ரூ.7,000/-ம் ஆக கொடுத்துவிடுங்கள், அந்த பணம் எனக்குமட்டுமல்ல ஆபீசில் வேலை செய்யும் மற்ற அலுவலர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்றும் கூறினார். பணம் கொடுத்துவிட்டால் அன்றைய தினமே மீட்டர் பொருத்தி, கனெக்சன் கொடுத்துவிடலாம் என்றும், நீங்க பணம் ரூ.7,000/-ஐ ஏற்பாடு பண்ணிட்டு வந்து என்னை பாருங்க என்றும் சொன்னார். எனக்கு எனது தொழிற்கூட மின் இணைப்பு பெறுவதற்கு கே.ஆர்.தோப்பூர் EB அலுவலகத்தில் பணிபுரியும் A.E. திருமதி.கவிதா அவர்களுக்கு லஞ்சமாக ரூ.7,000/- கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் லஞ்சம் கேட்ட A.E. திருமதி.கவிதா மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/-xxxxxx (ஆனந்தி.R) 27.07.2026) Sir, Received the above computer typed complaint on 27.07.2026 at about 17.15 Hrs. Sd xxxx (M.Nallammal) 27/07/2026, Inspector of Police, V & AC, Salem.

Sir, The genuineness of the informant was verified through sources and nothing came to adverse and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from the DVAC and registered a case in Salem V & AC Cr.No.12/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 28/07/2026 at 06.30 hrs. Sd xxxx (M.Nallammal) 28/07/2026, Inspector of Police, V & AC, Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

28/07/2026

(M.நல்லம்மாள்)
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.